மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதற்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அருங்காட்சியகத்தை அதியமான் கோட்டம் அருகில் உள்ள அருங்காட்சியகத்துடன் இணைப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய தருமபுரி அருங்காட்சியகத்தை அதியமான் கோட்டம் அருகில் உள்ள அருங்காட்சியகத்துடன் இணைப்பதற்கான கருத்துருவிற்கு அரசினுடைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று அதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

***3093—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 7]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மணியாச்சி கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மணியாச்சி ஊராட்சி, மணியாச்சி கிராமத்தில் குழந்தைகள் மையம் தொடங்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், தற்போது அருகிலுள்ள நூலகக் கட்டடத்தில் இக்குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2020–2021 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு போற்றும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் தோன்றிய, கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் உள்ளத்தில் குடியிருக்கும் மாண்பாளர், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சரும், தமிழக மக்களின் பாதுகாவலரும், தமிழ் மொழியின் பாதுகாவலரும், (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உழைப்பு, உழைப்பு என்ற பாராட்டைப் பெற்றவரும், அரசியல் போராளியும், சட்டத்தின் போராளியும், கழகத் தலைவரும், தமிழகத்தின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மாவட்டத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதும், ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய நேரங்களிலும் பலமுறை நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது; கேள்வி நேரத்தை அதற்காக மட்டும் பயன்படுத்துங்கள். புகழ்வதற்கோ அல்லது பெருமைப்படுத்திப் பேசுவதற்கோ பயன்படுத்தி யாரும் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களை நான் மீண்டும் வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கேள்வி நேரத்தில் வேறு எதைப் பற்றியும் பேசாமல், புகழ்ந்து பேசிக் கொண்டிருக்காமல், கேள்வியை மட்டும் கேளுங்கள் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள். கேள்விக்கு வாருங்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், மணியாச்சி கிராமத்தில், நமது அரசின் சீரிய முயற்சியால் அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியம்புத்தூர், மருதன்வாழ்வு, குலசேகரநல்லூர், ஐரவன்பட்டி ஆகிய கிராமங்களிலும், இத்தொகுதியிலுள்ள மேலும் பல்வேறு இடங்களிலும் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடம் கட்டித் தர வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குட்பட்ட நேரு காலனி, வடக்கு சிலுவைப்பட்டி, மேற்கு சிலுவைப்பட்டி, கணபதி நகர், சுனாமி காலனி, கீதா ஜீவன் நகர், ஜாகீர் உசைன் நகர் போன்ற பகுதிகளில் 50–க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கிறார்கள். அங்கு கட்டட வசதியும் உள்ளது. 22–3–2022 அன்று மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்துள்ளேன். அப்பகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி, கணபதி நகர், சுனாமி காலனியை மையமாக வைத்து, புதியதாக ஓர் அங்கன்வாடி மையம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள குலசேகரநல்லூர், ஐரவன்பட்டி போன்ற இடங்களிலுள்ள குழந்தைகள் மையங்களுக்கும் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்திலுள்ள கணபதி நகர், சுனாமி காலனியில் 50 குழந்தைகள் இருக்கிறார்கள்; அங்கு கட்டட வசதியும் இருக்கிறது; அங்கு புதிய அங்கன்வாடி மையம் தொடங்க வேண்டுமென்று கூறினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கேற்ப, எங்கு குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறதோ, அந்த மையத்தை மாற்றி வேறோர் மையத்தில் அமைப்பதற்கு இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லா மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களையும், எங்களைப் போன்ற எளியவர்கள் அவையில் அமர்ந்து, தொகுதிப் பிரச்சினைகளை எழுப்புவதற்கு அயராது பாடுபட்ட சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், எங்களின் வழிகாட்டி, பாசத்திற்குரிய அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்குகிறேன். தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில், கதிராமங்கலம், கோணுலாம்பள்ளம், அணைக்கரை போன்ற பகுதிகளில் சத்துணவு மையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.*

ஏற்கெனவே கட்டப்பட்ட பல கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றுக்கான கட்டடங்களை கட்டித் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்கான அனுமதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் பல்வேறு கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். அதற்கு நிச்சயமாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அல்லது பிற திட்டங்களின்மூலம் அங்கு கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், வழிகாட்டி நெறிமுறைப்படி பழுதடைந்த கட்டடங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுதுபார்க்க முடியாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, கட்டடத்தைப் பழுதுபார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

சாலை அமைத்தல்

***3703—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—